With Best Compliments
HEARING AIDS

SIEMENS
Hearing Instruments
Authorised Hearing Care Centre
JAGADISH HEARING AIDS
No.3, Kutchery Road, Mylapore, Chennai-4.
24640968 / 9444851663

# MYLAI EXPRESS

*Neighbourhood Newspaper*

Read our PAPER @ www.mylaiexpress.com

Free Circulation


For online Flute & Vocal Music Classes
Ct: hemflute@gmail.com

VOL - 7 ISSUE - 37 Office:9840643902/49574279 e-mail: mylaiexpress1@gmail.com Mar 30 - Apr 5, 2018



### CENTRE CHOOSE " REVATHI RAMACHANDRAN " AS THE DIRECTOR OF KALASHETRA FOUNDATION



Bharatha Natyam Dancer and Choreographer Revathi Ramachandran was chosen as Director of the 82 year old prestigious Kalashetra foundation . After a gap of nearly 10 months the new Director was chosen by the centre on March 30th. Mrs Revathy Ramachandran a follower of Melattur style of Bharatham is a disciple of Mangudi Dorairaja Iyer . The position remained vacant since July last year. Dancer Priyadarshini Govind was the previous Director of the institution.

### ECR TOLL RATES REVISED EFFECT FROM APRIL 1ST

Effective April 1st 2018 to March 31,2019 the State Government revised the Toll rates on East Coast Road. The new rates for two stages – from Akkarai ( Chennai) to Mamallapuram with four lanes and Mamallapuram to Puducherry with two lanes has been revised . From Akkarai to Mamallapuram , three wheeler, car, and Jeep drivers will have to pay Rs.36 for a single journey and Rs.56 for a return journey within a day. Multiple pass daily trips Rs.102 and Rs.1,203 for a 50 trip pass valid three months and Rs.2131 for a monthly pass . Accordingly for LCVs, minibuses and trucks were also revised.

### BROADBAND SPEED CHENNAI CITY TOPS SAYS A STUDY

According to a study titled 'India's Digital Divide' how broadband speed splits the nation by Seattle –headquartered from Ookla, at 32.67 Megabits per second (Mbps) Chennai clocks the highest fixed broadband download speed among the cities in the country. India is ranked 67th globally with an average speed of 20.72Mbps. The analysis said " of the 20 largest cities in India Chennai download speed of over 32.67 Mbps for fixed broadband is 57.7% faster than the average for the rest of the country. Bangaluru follows Chennai with an average speed of 27.2Mbps and Mumbai was the lowest among the big cities with an average speed of 12.06Mbps.

Sri Ramajayam

## ASTHIKA SAMAJAM (REGD.)

(Naimisaranya Mandapam)

OldNo.14, New No.2, Venus Colony Ist Street, Alwarpet, Chennai - 600 018.
Phone:2435 2242 Email: asthikasamajam.venus@gmail.com

### SRI RAMA NAVAMI- MUSIC SERIES
### FROM 31.03.2018 TO 03.04.2018

| Date | Time | Particulars | |
|---|---|---|---|
| 31.03.18 Saturday | 6.30 to 8.30pm | Maharajapuram Ramachandran<br>Sri.M.R.Gopinath<br>Neyveli Sri Skandasubramanian | Vocal<br>Violin<br>Mridangam |
| 01.04.18 Sunday | 6.30to 8.30pm | Ms.Sushma Somasekar & Party | Violin |
| 02.04.18 Monday | 6.30 to 8.30pm | Smt.Sumitra Nintin<br>Sri.M.Shrikanth<br>Sri Akshay Ananthapadmanabhan | Vocal<br>Violin<br>Mridangam |
| 03.04.18 Tuesday | 5.30to 7.00pm | Smt.Hemalatha Mani & Party | Veena |
| 26.03.18 to 03.4.18 | 6.00am onwards | ஸ்ரீ கணபதி ஹோமம்<br>ஸ்ரீ ராம க்ஷடாக்க்ஷரி ஹோமம்<br>ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் மூலபாராயணம்<br>ஸ்ரீ ராமருக்கு அபிஷேகம் மற்றும் ஸகஸ்ரநாம அர்ச்சனை (ஸகஸ்ரநாம அர்ச்சனை ரூ.200/-) | |
| 03.04.18 Tuesday | 8.00pm | ஸ்ரீராமர் பட வீதி உலா | |

## All are Welcome

Sri. G.SITHARAMAN
President (94440 81583)

Sri. N.JAYACHANDRAN
Sri. MOHAN SREENIVAS
Vice presidents

Sri. S.VENKATESWARAN (94440 32191)
Sri. S.BALAJI (94440 43538)
Secretaries

Sri. B.RAMAKRISHNAN
Treasurer (93802 84435)



## Indian Council for Cultural Relations

भारतीय सांस्कृतिक सम्बंध परिषद् / இந்திய கலாச்சார உறவு மையம்

(Ministry of External Affairs, Govt. of India)

(विदेश मंत्रालय, भारत सरकार) / வெளியுறவு துறை, இந்திய அரசு

in collaboration with

### Shri Ariyakudi Music Foundation

cordially invites you to a

**ODISSI** Dance
by Ms. **Rina Jana** from Kolkatta
(Senior Diciple of Guru Kelucharan Mahapatra)

Chief Guest : **Dr. C. K. Gariyali,** IAS (Retd)

**on Thursday, 5th April, 2018** at 6.30 p.m.
under the '**HORIZON**' Programme
at **Raga Sudha Hall,** Luz Avenue,
Mylapore, Chennai-600 004















SRI RAMA NAVAMI MUSIC SERIES @ ASTHIKA SAMAJAM, VENUS COLONY : 1. Saharsanama Archana on Mar 28 for Lord Rama 2) Vocal concert by Ms.Madhuri Koushik & Party on 27th March 3) Vocal concert by Smt.Uma Venkatakrishnan & Party 28th March at the samajam premises.

# CLASSIFIEDS

**PRANAVAMM HOME NEEDS**

HOME MADE
APPALAM, VADAM, VATHALS,
PICKLES, PODI & SNACKS
WHOLESALE & RETAIL DEALER

New No.24, Old No.89, Adam Street, Mylapore, Chennai-600 004.

9444102394

**TYPING**

Tamil & English
DTP & Book work
will be undertaken
@ reasonable cost

CONTACT

8072753760

**LEASE**

Wanted Flat / house
in Mylapore area
for lease 2-3 years
in the range of
Rs.5 to 6lakh

CONTACT

9677177647

All kinds of
POOJAS, HOMAMS
performed in most
religious way
at your home.
SHRARTHAM CEREMONY
also performed
at our / your place.

Contact :
S.GANAPATHI RAMA SASTRIGAL
Mob: 94444 69174

Address: No.12, T.P.Scheme Road,
Raja Street Extension, Mandaveli,
Chennai - 600 028. (Near BSNL)



'Sri Sundararama Baktha Mandali' led by Smt Nikila Shyam Sunder & party performed 'Namsankeerthanam ' at Sri Thyagaraja Sangeetha Vidwath Samajam- Mylapore on 25th March, 2018 on the occasion of Ramanavami. This was Smt Nikila Shyam Sunder's maiden Namasankeethanam performance. Being Ramanavami, she rendered songs, & namavallis of Lord Rama. Her group consisted of four women members who sang with her are her students. Her accompaniments were Sri Keerthasenan on Keyboard and Sri D.V. Sivaraman on the Mridangam. Smt Nikila Shyam Sunder runs her music school at Abhiramapuram and can be contacted at 9884044624.



**Sree Karpagavalli Vidyalaya,** 91st Annual Day Celebrations was held at Mangollai, No.4, East Mada Street, Mylapore, Chennai on Saturday, the 24th March, 2018 at 3pm. Mylapore M.L.A. Dr.R.Nataraj delivered Special Address on the occasion. He observed that Sree Karpagavallli Vidyalaya is marching towards the Centenary Year Celebrations. Established as Thaadi Vaadhiyaar Pallikkoodam in the year 1926 and had eminent old students like popular Jounalist, Actor and Political Advisor Cho, Mrs Sarojini Varadappan, Actor Jayashankar etc. This school has got wonderful infra-structure to give good education to the poor children at free of cost and providing break-fast in the morning, lunch through noon-meal schemem given by the Government of Tamil Nadu and Evening Sancks supplied by voluntary organizations are really appreciable one. Hon'ble Justice T.N.Vallinayagam, Judge, Lok Adalat, High Court Chennai presided over the function and delivered Presidential Address. As a old student, Thiru.R.Sundararajan, Former Chairman and Managing Director, Indian bank inaugurated the Alumni Association of Sree Karpagavalli Vidyalaya. Smr.M.P.Nirmala, I.A.S., Chairman, Child Rights Protection Commission distributed prizes to the children who won in the oratorical, essay, handwriting and in sports activities and then delivered Felicitation Address. Lion S.Kiruthivasan, Chairman of Sree Karpagavalli Vidyalaya welcomed the gathering. Smt.V.Indumathi proposed vote of thanks. *For more info contact : Kalaimamani Dr.Cheyon, Secretary/Correspondent, Ph: 9444991415.*

# வார ராசி பலன்

**மேஷம்:** மற்றவர்களின் மனதை எடைபோட்டு அவர்களின் மனது கோணாதபடி நடந்து வெற்றியை பெறும் உங்களுக்கு பழைய நண்பர்களின் உதவிகள் இந்த மாதம் கிடைக்கும். கண், காது மற்றும் பலவலி வந்து போகும். வாகனத்தை மாற்றும் எண்ணம் உருவாகும். கணவன் மனைவி உறவில் அன்னியோன்யம் அதிகரிக்கும்.

**ரிஷபம்:** எந்த முடிவையும் தீர்க்கமாக எடுக்கும் குணம் கொண்ட உங்களுக்கு இந்த மாதம் புதிய திட்டங்கள் நிறைவேறும். நல்லவர்களின் நட்பு மூலம் நன்மைகள் கிடைக்கும். பூர்வீகச் சொத்து பிரச்சனையில் நல்ல முடிவு உண்டாகும். துணிச்சலாக நீங்கும் எடுக்கும் எந்த முடிவும் நல்லபலனைத் தரும். உத்தியோகத்தில் உங்களது நிர்வாகத் திறன் வெளிப்படும்.

**மிதுனம்:** போட்டி என்றால் அல்லா உண்ணும் போல் உண்டு புலியாக மாறி வெற்றி பெறும் உங்களுக்கு இந்த மாதம் கௌரவம் ஒருபடி மேலாகவே இரக்கும். புண்ணிய தலங்கள்கு செல்ல நேரிடும். காலி இடத்தை நல்ல விலைக்கு விற்க நேரிடும். கணவன்/மனைவி உறவு மேம்படும்.

**கடகம்:** எவர் தவறுகள் செய்தாலும் தட்டிக் கேட்கும் குணம் கொண்ட உங்களுக்கு இந்த மாதம் உங்களது புத்திசாலி தனத்தால் பல வெற்றிகளை பெற்று உங்களது மனது சந்தோஷத்தில் லயிக்கும். விலை உயர்ந்த ஆபரணங்கள் வாங்குவீர்கள். சிலர் வீடு மாறுவீர்கள். மனைவியர் உடல் நலத்தில் அக்கறை செலுத்தவும்.

**சிம்மம்:** விட்டுக் கொடுத்தாலும் தோல்வியை சந்திக்காத குணம் கொண்ட உங்களுக்கு இழுபரியாக இருந்த வேலைகள் எல்லாம் இந்த மாதம் நல்லபடியாக முடிவடையும். வேலை வாய்ப்புகள் சிலருக்கு வந்து சேரும். கணவன்/மனைவி ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. வாகனத்தில் செல்லும் போது எச்சரிக்கை தேவை.

**கன்னி:** கடினமாக உழைத்து வெற்றியை பெறுவதில் கண்ணும் கருத்துமாக உழைக்கும் குணம் கொண்ட உங்களுக்கு இந்த மாதம் குடும்பத்துடன் வெளியூர் செல்ல வேண்டி வரும். மனைவியுடன் சண்டை போட வேண்டாம். ஜாமீன் கையெழுத்து யாருக்கு போட வேண்டாம். யாரையும் நம்பி பெரிய காரியங்களில் ஈடுபட வேண்டாம்.

**துலாம்:** கடல் அலைக்கு ஓய்வு இல்லை. அதைப் போல்தான் வாழ்க்கை. பிரச்சனைகளும் இருக்கும் என்ற குணம் கொண்ட உங்களுக்கு இந்த மாதம் தடைப்பட்ட காரியங்கள் நல்ல படியாக முடிவடையும். மருத்துவர் ஆலோசனை இன்றி எந்த மருந்தையும் உண்ண வேண்டாம். கணவன் / மனவை உறவில் விரிசல் ஏற்பட்டு சரியாகும்.

**விருச்சிகம்:** பழி பாவத்திற்கு அஞ்சினாலும் நியாயத்திற்கு போராடும் குணம் கொண்ட உங்களுக்கு இந்த மாதம் நல்ல பலனை தரும். மனைவி யின் ஒத்துழைப்பு அதிக மிருக்கும். நல்லவர்களின் நட்பு கிடைப்பதால் உங்களது புகழ் அதிகரிக்கும் உத்தி யோகத்தில் மோதலை தவிர்க்கவும். செலவினங்கள் அதிகமிருந்தாலும் அது நன்மைகள் தான் தரும்.

**தனுசு:** உங்களது எண்ணங்கள், செய்லகள் மூலம் பல வெற்றிகள் பெறும் உங்களுக்கு இந்த மாதத்தில் பல தைரிய முடிவுகள் எடுப்பீர்கள். பெரிய பதவிகள், பிரமோஷன் வந்து சேரும். வெளி வட்டாரத்தில் பெருமையாக உங்களைப் பற்றி பேசக் கூடும். உங்களின் நீண்ட நாள் கனவு நனவாகும். திடீர் யோகங்கள், அதிரடி முன்னேற்றம் கிடைக்கும். தாய், தந்தையரை பேணி காக்கவும்.

**மகரம்:** பிறர் வளர்ச்சியை கண்டு சந்தோஷப்படும் உங்களுக்கு இந்த மாதத்தில் கடினமான காரியங்களைக் மிக எளிதாக முடிப்பீர்கள். உறவினர் வருகை மகிழ்ச்சியைத் தரும். சுப நிகழ்ச்சிகளால் வீடுகளை கட்டும். எதிலும் நிதானத்தை கையாளுங்கள், கணவன்/ மனைவி உறவு விட்டுக் கொடுத்து செல்வது மூலம் பல வெற்றிகளை பெறலாம்.

**கும்பம்:** எதற்கும் அஞ்சாது நியாயத்திற்கு போராடும் உங்களுக்கு இந்த மாதத்தில் கேட்ட இடத்திலிருந்து கேட்டது கிடைக்கும் மாதமிது. உறவினர்கள் மதிர்ப்பார்கள். அலுவலகத்தில் வளைந்து கொடுத்து செல்வது மூலம் ஆபத்துகளிலிருந்து விடுபடலாம். சக ஊழியர்களின்சொந்த விஷயங்களில் தலையிட்டு செய்யாதீர்கள். கணவன் / மனைவி சண்டைக்கு பின் சரியாகும்.

**மீனம்:** நடுநிலைமையுடன் எதையும் கையாளும் குணம் கொண்ட உங்களுக்கு இந்த மாதத்தில் மிக தைரியம் ஏற்பட்டு செயல் படுவதால் சந்தோஷம் அதிகரிக்கும். எதிர்பர்த்த பணஉதவி கிடைக்கும். உடமைகளை கவனமாக பார்த்து கொள்வது நல்லது. டென்ஷன் இல்லாமல் போனது குடும்பத்தில் இனிமையைத் தரும்.

# Events of this week........

### SUMMER CAMP AT BHAVAN

Bharatiya Vidya Bhavan, East Mada Street, Chennai-600 004 to conduct Summer Workshop in Indian Choral Music from 23rd April to 29th April 2018 (10.00 am to 12.00 noon) for students above six years. For details contact Dr. Sudha Raja : Mobile Nos. 9840132913/ 9840112870.

### TEMPLE CLEANING

150 TC AT NAVASAKTHI VINAYAKAR TEMPLE, MYLAPORE CHN-4 (near LUZ SIGNAL), BUS STAND: MYLAPORE on 8th APRIL'2018. PLEASE ATTEND THE TEMPLE CLEANING AND HAVE BLESSINGS OF THE LORD.
Please call : 9952012125 Mr.NAGARAJAN

### SRI RAMAKRISHNA MATH — Time : 5.30pm

01/04/2018 Srimad Bhagavad Gita Srimat Swami Gautamanandaji Maharaj
02/04/2018 Devi Mahatmyam Swami Suprajnananda
03/04/2018 Kandhar Anuboothi Swami Nilamadhavananda
04/04/2018 Srimad Bhagavatam Swami Paramasukhananda
06/04/2018 Shivananda Lahari Swami Buddhidananda
07/04/2018 Sri Ramakrishnarin Amudha Mozhigal Srimat Swami Gautamanandaji Maharaj
08/04/2018 Srimad Bhagavad Gita Srimat Swami Gautamanandaji Maharaj
09/04/2018 Devi Mahatmyam Swami Suprajnananda
10/04/2018 Kandhar Anuboothi Swami Nilamadhavananda
11/04/2018 Srimad Bhagavatam Swami Paramasukhananda
13/04/2018 Shivananda Lahari Swami Buddhidananda
14/04/2018 Tamil New Year & Sri Tyagabhrahma Aradhana
4.30 to 5.00 p.m. Discourse by Swami Nilamadhavananda (Tamil)
5.00 to 6.15 p.m. Pancharatna Kirtis & Bhajan by Sri K. Vijayaraghavan
15/04/2018 Srimad Bhagavad Gita Srimat Swami Gautamanandaji Maharaj

**Venue : Sri Ramakrishna Math, Mylapore**

Publisher : K.Ganesh
Editor : N.Panchapakesan
Designer : Ushashankar

Our Office Address:
No.20/45, Alamelumangapuram,
Mylapore, Chennai - 600 004.
PH: 044-49574279
Email: mylaiexpress1@gmail.com
Website : www.mylaiexpress.com

## DISCLAIMER

Readers are advised to make appropriate enquiries while responding to advertisements in these columns. Mylai Express does not vouch for any claims made by the Advertisers. The Printers, Publishers, Editor and Owners of Mylai Express shall not be held responsible / lable for any consequence, in case such cliam.

FOR ADVERTISEMENT IN MYLAI EXPRESS CONTACT
9840643902
9884944452

தமிழ் & English Typing,
DTP, Book Work,
Job Typing, Project Works,
Designing Works
and All Printing Jobs Undertaken
at an affordable cost



SJ DATA ENTRY
@ MYLAPORE
Contact
Ph: 8072753760 / 044-49574279
Email: sjdataentry@yahoo.com

## NEWS

### FIRE AT CITI CENTRE SHOPPING MALL @ MYLAPORE – NO ONE INJURED

On March 26th morning a fire broke out at the Chennai Citi centre shopping complex at Mylapore and fortunately no one was injured in the accident. At the third floor of the building where an office –cum- store functions due to an electrical short circuit the fire broke out at 11.40a.m. A plastic material stored in the store caught fire , thick smoke emanated from the building and the shoppers and staff were immediately evacuated . Fire services people broke the glass window and extinguished the fire

### METROWATER REPORTS CITY WILL SEE THROUGH THIS SUMMER WITHOUT DRINKING WATER SHORTAGE

Last week the inflow of Krishna water into city reservoirs reduced drastically as the water bodies in Andhra Pradesh have run short of resources. The Chennai Metro Officials said however this summer may not be hard for Chennai city citizens as there is adequate storage maintain water supply till August end. Chennai city is supplied with 650 million litres of water on alternate days and some 35mld is supplied through tankers. After many decades four reservoirs to be desilted and the work is likely to commence in May or June this year.

### FROM APRIL 14TH ONLY TRAVELATOR WILL BE OPENED TO PUBLIC AT CHENNAI AIRPORT

After a seven year delay a partly ready travelator facility was inaugurated by civil Aviation secretary R.N.Choubey and TN secretary Girija Vaidyanathan on March 25th at Chennai Airport. The facility will be open to the public only from april 14 as the travelator currently connects only the domestic terminal with the Chennai Metro rail station. Work to link it with the international terminal is expected to take a fortnight more said the officials. The 600 metre –long travelator was constructed at tan estimated cost of Rs80 crore.

### DEADLINE FOR AADHAAR LINKAGE EXTENDED INDEFINITELY

Supreme court indefinitely extended the deadline for linkage of Aadhaar with mobile phones, Takkal passports, bank accounts and for opening bank accounts from March 31,2018. The deadline extension will not apply to cases where subsidy is to be claimed from schemes covered by section 7 of the Aadhaar Act 2016. The government on March 21st extended the deadline for linking of Aadhaar to June 30th for welfare schemes in which benefits are transferred to citizens from the consolidated Fund of India.

### FOUNDATION FOR CRIME PREVENTION AND VICTIM CARE (PCVC) LAUNCHED HOTLINE FOR BURN & DOMESTIC VIOLENCE SURVIVORS

On March 25th Foundation for PCVC launched a National hotline facility in an effort to support survivors of domestic violence and burn violence. The numbers are 044-43111143 and 18001027282 a 24 hour toll free number. It was inaugurated by Elke Budenbender wife of German President Frank- Walter Steinmeier during their Chennai visit. The founder of PCVC said the facility would help women get counselling , legal awareness and information and the helpline receives more than 300 new crisis calls every year.

## EASY WAY FOR MULTIPLICATION

**For example Table of "87"**
First write down "table of 8 then write down table of 7 beside it"

| | | | |
|---|---|---|---|
| 8 | 7 | | 87 |
| 16 | 14 | (16+1) | 174 |
| 24 | 21 | (24+2) | 261 |
| 32 | 28 | (32+2) | 348 |
| 40 | 35 | (40+3) | 435 |
| 48 | 42 | (48+4) | 522 |
| 56 | 49 | (56+4) | 609 |
| 64 | 56 | (64+5) | 696 |
| 72 | 63 | (72+6) | 783 |
| 80 | 70 | (80+7) | 870 |

**Now table of 38**
First write down "table of 3 then write down table of 8 beside it"

| | | | |
|---|---|---|---|
| 3 | 8 | | 38 |
| 6 | 16 | (6+1) | 76 |
| 9 | 24 | (9+2) | 114 |
| 12 | 32 | (12+3) | 152 |
| 15 | 40 | (15+4) | 190 |
| 18 | 48 | (18+4) | 228 |
| 21 | 56 | (21+5) | 266 |
| 24 | 64 | (24+6) | 304 |
| 27 | 72 | (27+7) | 342 |
| 30 | 80 | (30+8) | 380 |
| 33 | 88 | (33+8) | 418 |

**Now table of 92**
First write down "table of 9 then write down table of 2 beside it"

| | | | |
|---|---|---|---|
| 9 | 2 | | 92 |
| 18 | 4 | | 184 |
| 27 | 6 | | 276 |
| 36 | 8 | | 368 |
| 45 | 10 | (45+1) | 460 |
| 54 | 12 | (54+1) | 552 |
| 63 | 14 | (63+1) | 644 |
| 72 | 16 | (72+1) | 736 |
| 81 | 18 | (81+1) | 828 |
| 90 | 20 | (90+2) | 920 |
| 99 | 22 | (99+1) | 1012 |

This way one can make Tables from10 to 99 (A Vedic Mathematics)






















## பங்குனி பெருவிழா -2018

அருள்மிகு கற்பகாம்பாள் கபாலீஸ்வரர் ஆலயத்தில் மார்ச் 22-ம் தேதி கொடியேற்றத்துடன் பங்குனி பெருவிழா உற்சவமும் பக்தர்கள் மகிழும் வண்ணம் சிறப்பாக துவங்கியது. படம் (1) அதிகார நந்தி (2) திருத்தேர் (3) அறுபத்து மூவர் (4) ரிஷப வாகனம் (5, 6) பூதன், பூதகி (7) அறுபத்து மூவரில் கோலவிழி அம்மன்.

UTSAVAM PHOTOS SPONSORED BY
25, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர் சென்னை-4
போன் 24640470 / 42066631 / 42102609

கீதா காபி

UTSAVAM PHOTOS SPONSORED BY
54, PPV கோவில் தெரு, மயிலாப்பூர், சென்னை-4
போன் 24983350



# பங்குனித் திருவிழாவில் அன்னதானங்கள்

மயிலை ஆடம் தெருவில் உள்ள சம்பத் வாழை இலை கடை உரிமையாளர் தொடர்ச்சியாக 16-வது முறையாக இந்த வருடமும் மார்ச் 29 அன்று கபாலீஸ்வரர் கோவில் அறுபத்துமூவரை முன்னிட்டு தனது கடையில் மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை பக்தர்களுக்கு அன்னதானம் அளித்து மகிழ்வித்தார்.



மயிலை கபாலீஸ்வரர் திருக்கோயிலில் அறுபத்து மூவர் அன்று மகாகவி பாரதியார் மக்கள் கட்சி நிறுவனத் தலைவர் வழக்கறிஞர் மயிலை எஸ்.சத்யா அவர்கள் பக்தர்கள் மகிழும் வண்ணம் அன்னதானம் வழங்கினார்.

## ஸ்ரீராம நவமி



ஆழ்வார்பேட்டை டிசில்வா சாலையில் அமைந்துள்ள **ஆபத்பாண்டவர் திருக்கோயிலில்** ஸ்ரீராம நவமியை முன்னிட்டு ஸ்ரீராமருக்கு சிறப்பு அலங்காரம்.


Sivamayam -Thiruchitrambalam

Kailaye Mayilai Mayilaye Kayilai

ARULMIGU SRI KAPALEESWARAR TEMPLE
Mylapore, Chennai - 600 004

PANGUNI PERUVIZHA AND VIDAIYATRI MUSIC AND DANCE FESTIVAL
2nd April to 8th April - 2018
14th April - 2018



2nd April 2018 (Monday),6.30pm
"Sri Devi Nrithyalaya" Presents
"SIVAMAYAM" Dance Drama
Choreography - Dr. Sheela Unnikrishnan
Music : Ghatam - Dr. S. Karthick
Lyrics - Prof. Dr. S. Raghuram

3rd April 2018 (Tuesday), 6.30pm
Carnatic Vocal Concert
Smt. Shanmukhapriya & Smt. Haripriya
Sri. M.A. Krishnaswamy - Violin
Sri. K. Sai Giridhar - Mrudangam
Madipakkam Sri. A. Murali - Ghatam

4th April 2018 (Wednesday), 6.30pm
Carnatic Vocal Concert
Sri. Sanjay Subrahmanyan
Sri. S. Varadarajan - Violin
Neyveli Sri. B. Venkatesh - Mrudangam
Sri. S. Venkataraman - Kanjira

5th April 2018 (Thursday), 6.30pm
Carnatic Vocal Concert
Smt. Ranjani & Smt. Gayathri
Sri. B.U. Ganesh Prasad - Violin
Sri. K. Sai Giridhar - Mrudangam
Sri. S. Sunil Kumar - Kanjira



6th April 2018 (Friday), 6.30pm
Carnatic Vocal Concert
Sri. Vijay Siva
Smt. Lalgudi Vijayalakshmi - Violin
Bombay Sri Balaji - Mrudangam
Sri. S. Sunil Kumar - Kanjira

7th April 2018 (Saturday), 6.30pm
Carnatic Vocal Concert
Sri. Abhishek Raghuram
Sri. B.U. Ganesh Prasad - Violin
Sri Vijay B. Natesan - Mrudangam
Sri V. Suresh - Ghatam

8th April 2018 (Sunday), 6.30pm
Carnatic Vocal Concert
Smt. Jayashree Vaidyanathan
Shri Karaikal S. Venkatasubramaniam - Violin
Shri Manikkudi S. Chandra Sekar - Mrudangam
Sri S. Narasimhan - Ghatam

14th April 2018 (Saturday), 6.30pm
"NAMASIVAYA" Sangeetha Upanayasam
by Smt. Visaka Hari
Shri B. Anantha Krishnan - Violin
Shri Neyveli Skanda Subramaniam - Mrudangam
Shri Trichy K. Murali - Ghatam

Web:www.mylaikapaleeswarar.tnhrce.in
Email:kapaleswararamyl@tnhrce.com
Telephone : 044-24641670

ALL ARE WELCOME


## Express Cinema

### விஜய் ஆண்டனியின் காளி!'



இசையமைப்பாளரும் நடிகருமான விஜய் ஆண்டனி நடிக்கும் படம் காளி'. அஞ்சலி, சுனைனா, ஷில்பா, யோகிபாபு, அம்ரிதா, ஆர்.கே.சுரேஷ், ஜெயபிரகாஷ் உள்ளிடோர் இந்தப் படத்தில் நடித்துள்ளனர். கிருத்திகா உதயநிதி இயக்கியுள்ளார். இந்தப் படத்தை ஃபாத்திமா விஜய் ஆண்டனி தயாரிக்கிறார். இந்தப் படத்தின் ட்ரெய்லர் தற்போது வெளியாகியுள்ளது

### சமுத்திரக்கனி கேட்கும் கேள்வி..!



தாமிரா இயக்கத்தில் சமுத்திரக்கனி, ரம்யா பாண்டியன், ராதாரவி, காளி வெங்கட், சுஜா வருணி பேபி மோனிகா மற்றும் பலர் நடித்திருக்கும் திரைப்படம் ஆண் தேவதை. இப்படத்தின் ட்ரெய்லர் வெளியாகியுள்ளது. இதில் வாழ்வதற்காக வேலைப் பார்க்கிறோமா இல்லை வேலைப் பார்ப்பதற்காக வாழ்கிறோமா என சமுத்திரக்கனி கேள்வி கேட்டுள்ளார்.

### மிஷ்கின் இயக்கத்தில் சாந்தனு!



மிஷ்கின், சாந்தனு ஹீரோவாக நடிக்கும் புதிய படத்தை இயக்குகிறார். இதில் அவரின் ஜோடியாக நித்யா மேனன், சாய் பல்லவி நடிக்கின்றனர். பி.சி.ஸ்ரீராம் ஒளிப்பதிவு செய்கிறார். இந்தப் படத்தின் ஷூட்டிங் சென்னையில் விரைவில் தொடங்குகிறது. மிஷ்கின் தற்போது சூப்பர் டீலக்ஸ்', சுட்டுப்பிடிக்க உத்தரவு' ஆகிய படங்களில் நடித்து வருகிறார்.

### விஜய் படத்துக்கு மட்டும் அனுமதியா?



தயாரிப்பாளர் சங்கத்தின் செயலாளர் துரைராஜ், 'விஜய் நடிக்கும் படத்துக்கு மட்டும் சூட்டிங் நடத்த அனுமதி அளிக்கப்படவில்லை. மேலும், சில படங்கள் சிறப்பு அனுமதி பெற்று இரண்டு நாள் ஷூட்டிங் நடைபெறுகிறது' என்று விளக்கமளித்துள்ளார். முன்னதாக ஸ்ட்ரைக் நடக்கும்போது விஜய் படம் ஷூட்டிங் நடப்பதாகக் குற்றச்சாட்டு எழுந்தது.


FOR ADVERTISEMENT IN MYLAI EXPRESS CONTACT
9840643902
9884944452

# ஸ்ரீராம நவமி



ஸ்ரீராமநவமி என்பது சக்ரவர்த்தித் திருமகனான, திருமாலின் தசாவதாரங்களில் ஒன்றான ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதம் வளர்பிறையில் நவமிதிதியில், புனர்பூச நட்சத்திர தினத்தன்று கொண்டாடப்பட்டு வருகிறது. ஸ்ரீராமர் ஜனித்த நட்சத்திரம் புனர்பூச நட்சத்திரம். ஸ்ரீராமர் அயோத்தியை ஆண்டு வந்த தசரத சக்கரவர்த்திக்கு முதல் மகனாக பிறந்தவர். ஸ்ரீராமர் அவதார புருஷர். ஸ்ரீராமர் பிறந்ததற்கும் புராண கதைகள் உள்ளன. தசரத சக்கரவர்த்திக்கு குழந்தை பாக்கியமில்லை. இவர் ஒருமுறை வேட்டைக்கு சென்றபோது, ஒரு வயதான ரிஷி தம்பதிகளின் ஒரே மகனை கொன்று விட்டார். தனது பார்வையற்ற வயதான தாய், தந்தையரை சுமந்து சென்று கொண்டிருந்தார் இளைய ரிஷி. அவர் தனது பெற்றோர்களின் தாகத்தை தணிக்க நீர் முகர்வதற்காக அருகிலிருந்த நீர்நிலையில் நீர் முகர்ந்து கொண்டிருந்தார். அவர் பாத்திரத்தில் நீர் முகர்ந்த சத்தம் யானைநீர் அருந்துவது போல் தசரதர் காதில் விழந்தது. அந்த திசை நோக்கி அம்மை செலுத்தினார் தசரதர். அவர் விடுத்த அம்பு குறி தவறாமல் நீர் முகர்ந்து கொண்டிருந்த ரிஷிகுமாரரை தைத்தது. அந்த இடத்திலேயே துடிதுடித்து விழுந்தார். தான் வேட்டையாடியது யானைதான் என்ற எண்ணத்தில் தேடி வந்தார் தசரதர். ஆனால் அவர் ரிஷிகுமாரர் ரத்த வெள்ளத்தில் இருப்பதை கண்டு அதிர்ந்தார். ரிஷிகுமார் அருகில் சென்றார். ரிழிகுமாரர் என் வயதான பெற்றோருக்கு நீர் எடுக்க வந்தேன் நீர் என்னை கொன்றுவிட்டீர். இனி என் பெற்றோரை யார் காப்பாற்றுவார்கள் என வருந்தியவாறே உயிர் துறந்தார். தசரதர் ரிஷி தம்பதிகளை தேடி சென்று தான் செய்த தவறை கூறி வருந்தினார். வருத்தத்திலும், கோபத்திலும் அவர்கள் தசரதனுக்கு சாபம் அளித்தனர். நாங்கள் புத்திரனை இழந்து புத்திர சோகத்தில் தவிப்பது போல் நீயும் புத்திர சோகத்தில் தவித்து இறப்பாய் என சாபமிட்டனர். தசரதனுக்கு புத்திர பாக்கியம் கிடையாது என்றிருந்த சாபம் இதனால் நீங்கியது அவருக்கு அவதார புருஷனாக ஸ்ரீராமசந்திர மூர்த்தியே புத்திரனாக பிறந்தார். ஆனால் கைகேயி கேட்ட வரன் காரணமாக ராமரை காட்டுக்கு அனுப்பி மகனை இழந்து ரிஷி தம்பதிகள் இட்ட சாபம் பலிக்கும் விதமாக தசரதர் புத்திர சோகத்தில்தான் இறந்தார். புத்திரபாக்கியம் இல்லாத தசரதச் சக்கரவர்த்திக்கு ஸ்ரீராமர் பிறந்தது இவ்வாறுதான் என இந்த கதை கூறுகிறது.

மனிதன் உலகில் எப்படி வாழ வேண்டும் என்பதை மக்களுள் ஒருவராக வாழ்ந்து உலகத்துக்கு உணர்த்திய அவதாரமே ஸ்ரீ ராமாவதாரம். ராமர் அவதாரம் எடுத்த நாளையே ராம நவமியாக இந்துக்கள் வழிபடுகின்றனர்.

**தர்மம் காக்க அவதரித்த ராமன்:**
தர்மம் அழிந்து, அதர்மம் தலை எடுக்கும் போதெல்லாம் மண்ணுலகையும், மக்களையும் காக்க மகாவிஷ்ணு அவதாரங்கள் எடுத்தார் என்கின்றன புராணங்கள். இதில் ஏழாவதாக எடுத்த ராம அவதாரம் மனித அவதாரமாக இருந்ததால் சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது. முந்தைய அவதாரங்களான மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனர், பரசுராமர் ஆகியவை. நீர் வாழ்வனவாகவும், விலங்காகவும், விலங்கும் மனிதனும் இணைந்து காணப்படும். இந்த ராம அவதாரத்தில் தான் மனிதர்கள் படும் அனைத்து இன்னல்களையும் இறைவனும் அனுபவித்து அதன் மூலம் மக்களுக்கு பாடம் புகட்டியிருக்கிறார்.

**அவதார சிறப்புகள்:** ரகு குலத்தில் தசரத சக்கரவர்த்திக்கு மகனாக உதித்த ராமன், சீதாதேவியை மணந்து ஏகபத்தினி விரதனாக இருந்தார். தந்தை செய்து கொடுத்த சத்தியத்தைக் காப்பாற்றினார். அரக்கன் ராவணனை சம்ஹாரம் செய்து மக்களை காத்தார். இவரது சிறப்புகளை விளக்கும் ராமாயணம் நமது இதிகாசங் களில் ஒன்றாக போற்றப்படுகிறது. இதில் ராம அவதாரத்தைப் பற்றியும், அவர் செய்த சாதனைகளைப் பற்றியும் தெளிவாக எடுத்துக் கூறுகிறது.

**ராமநவமி கொண்டாட்டம்:** அவதார நாயகன் உதித்த நாளை, ஸ்ரீராமநவமி விழாவாக ஆண்டு தோறும் பக்தர்கள் கொண்டாடி மகிழ்கின்றனர். ராமர் பிறந்த தினத்தோடு முடியும் பத்து நாட்களை முன் பத்து எனவும், ராமர் பிறந்த தினத்திலிருந்து வரும் பத்து நாட்களைப் பின் பத்து எனவும் இருபது நாட்கள் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். இந்த நாட்களில் ஸ்ரீராமரை வழிபட்டு விரதம் மேற்கொள்வர். பஜனைகள், இராமயணச் சொற் பொழிவுகள் நடைபெறும். பக்தர்களுக்கு பானகம், நீர்மோர், சுண்டல், விசிறி முதலியவை வழங்கப்படும்.

**நீர்மோர் பானகம்:** ஸ்ரீராமர் விசுவாமுத்திர முனிவருடன் இருந்த போதும், கானக வாழ்க்கை மேற்கொண்டிருந்த போதும் தாகத்திற்கு நீர் மோரும் பானகமும் பருகினார் என்பதை நினைவுபடுத்தும் விதமாகவே அவை இரண்டும் ஸ்ரீராமபிரானுக்கு நிவேதனம் செய்யப்பட்டு வருகிறது. வைஷ்ணவ ஆலயங்களில் ஸ்ரீராமருக்கு பட்டாபிஷேக விழா சிறப்பாக நடைபெறும். வீடுகளில் ஸ்ரீராமர் பட்டாபிஷேகப் படத்தை வைத்துப் பூஜை செய்து , வடை, பருப்பு, நீர்மோர், பானகம், பாயசம் நிவேதனம் செய்து வழிபடுவார்கள். ஸ்ரீராமர் படம் அல்லது விக்ரகத்துடன் ராமாயணப் புத்தகத்தையும் வைத்துப் பூஜிப்பார்கள்.

**ராம நாமத்தின் மகிமை :** பகவானின் ஆயிரம் நாமங்களுக்கு இணையானது ராம நாமம். ஸ்ரீராம நவமியன்று ராமநாமம் சொல்வதும், ராமநாமம் எழுதுவதும் நற்பலனைத் தரும். பகவான் நாமம் இதயத்தைத் தூய்மைப் படுத்தி உலக ஆசைகள் என்னும் தீயை அணைக்கிறது. இறை ஞானத்தைத் தூண்டுகிறது. அறியாமை, காமம், தீய இயல்புகளைச் சுட்டுப் பொசுக்குகிறது. உணர்ந்தோ உணராமலோ உச்சரித்தாலே பகவான் அருள் கிட்டும் என்பது பக்தர்களின் நம்பிக்கை. ராம நாமத்தை சொல்லி ராம நவமி கொண்டாடுவோம். தசதர மைந்தனின் அருள் பெறுவோம்.

**ஹரே கிருஷ்ணா ஹரே கிருஷ்ணா**
**கிருஷ்ணா கிருஷ்ணா ஹரே ஹரே**
**ஹரே ராமா ஹரே ராமா**
**ராமா ராமா ஹரே ஹரே.**

# காஞ்சி மகானின் மகிமைகள்



அலகிலா விளையாட்டுடையான்

திருச்சிராப்பள்ளியில் பெரியவா தங்கியிருந்த சமயம் சீதாலட்சுமி ராமஸ்வாமி கல்லூரியின் தலைவர் மஹானிடம் வந்து தங்கள் கல்லூரியில் பெரியவாளின் பொற்பாதம் பட வேண்டும், குழந்தைகளுக்கு ஆசி வழங்க வேண்டும் என்று விண்ணப்பித்தார். மோனகுரு பதில் ஏதும் சொல்லவில்லை. அவரும் தொடர்ந்து விண்ணப்பித்தவாறே இருந்தார். ஒருநாள் அவரிடம் 'நாளை காலை உன் காலேஜுக்கு வரேன். நீயும் உன் மனைவியும் ஒரு பசு மாடு, கன்றுக்குட்டியோட காத்திருங்கோ' என்றார். பக்தருக்கு அளவிலா மகிழ்ச்சி. அப்படியே தயாராக இருக்க மஹானும் வந்தார். பூர்ணகும்ப வரவேற்பை அங்கீகரித்தார். பக்தரிடம் என் பாதம் எங்கெல்லாம் படணும்னு உனக்கு ஆசையோ அங்கெல்லாம் பசுமாடு கன்றுக்குட்டியை பிடிச்சிண்டு' நீ முன்னாடி போ, நான் பின்னாலேயே வரேன்' என்றார். அப்படியே எல்லா இடமும் சென்று வந்த பின், வெளியே வந்து 'திருப்தியா உனக்கு' என்று கேட்க அவர் என்ன பதில் சொல்வார்! கண்கள் கடலாக, மனம் உருகி கருணைக்கு நன்றி தெரிவிப்பதற்காக சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார். ஸ்ரீமடம் திரும்பிய மஹான் மாலை அடியார்களிடம் பேசிக் கொண்டிருக்கும் பொழுது காலையில் காலேஜுக்கு போன பேச்சும் வர, ஒருவர் 'பெரியவா ஏன் காலேஜுல பசு மாட்டு பின்னாலேயே போனா' என்று கேட்டார். சிரித்த மஹான் 'அவன் எங்ககிட்ட ரொம்ப பக்தியாயிருக்கான். நான் வந்தா அவன் காலேஜுக்கு ச்ரேயஸ்னு நினைச்சு கூப்பிட்டான். ஆனால் அந்த காலேஜோ ஸ்த்ரீகள் படிக்கிற காலேஜ். அவா எல்லா நாளும் காலேஜுக்கு வருவா. மாதம் விலக வேண்டிய நாளும் வரலாம். அதனால் தான் யோஜனை செய்தேன்.அவன் ஆசையும் நிறைவேறணும். என் ஆசாரமும் கெடக் கூடாது. அதுக்கு ஒரே வழி, எந்த தீட்டாக இருந்தாலும் அந்த இடத்தில் கோ பாததூளி பட்டுட்டா, அந்த இடம் பரிசுத்தமாயிடறதா சாஸ்த்ரத்துல இருப்பதால, பசு மாட்ட முன்னால விட்டுட்டு அது பின்னாலேயே நானும் போயிட்டு வந்தேன்' என்று சொன்னதைக் கேட்ட அனைவரும் பிரமிப்பிலிருந்து மீளவே இல்லை.

இப்படியும் தர்ம சூட்சுமமா? இப்படியும் அறம் வழுவா துறவு வாழ்க்கையா? நினைத்து நினைத்து நாமெல்லாம் ஆச்சர்யப்படலாம். வழிகாட்டி, குரு, ஆசார்யர் என்றால் இவரன்றோ! காலம் மாறிப்போச்சு, மாறிப்போச்சு என்று காலத்தின் மேல் பழிபோட்டு பழிபாவங்களுக்கு அஞ்சாதவர்கள் நிறைந்த இந்தப் பூமியில் இப்படியும் ஒரு அறநெறிச் செம்மலா! அன்பையும் அறத்தையும் அழகாக இணைக்கும் சாமர்த்தியம் காஞ்சி மஹாபெரியவாளை தவிர வேறு யாருக்கு இருக்கும்.

# மனதை கலங்க வைத்த பதிவு



என்னங்க...!! இந்த வீட்ல ஒண்ணு நான் இருக்கணும், இல்ல உங்க அம்மா இருக்கணும்....!! யாருன்னு நீங்களே முடிவு பண்ணிக்கங்க'.....!!
என்ன லதா என்ன பண்ணுச்சி அந்த கிழவி...!! நீ ஏன் டென்சனாகுறே....!! எனக்கு பிடிக்கலை அவ்வளோ தான்.....!!

சீக்கிரம் நானா அவங்களானு முடிவெடுங்க.....!! மறுநாள் காலை.....!! அம்மா நீ சீக்கிரம் கிளம்புமா..!! ' எங்கேடா மகேஷ்.....??? ' ' உன்னை ஹோம்ல சேர்த்துடுறேன் மா... அங்கே உனக்கு எல்லா வசதியும் கிடைக்கும் உன்னை போல நிறைய பேர் இருப்பாங்க. அவங்க கூட நீ சந்தோசமா இருக்கலாம் மா.
மகேஷ் எனக்கு இங்க என் பேரக்குழந்தைங்க கூட இருக்கறதுதான்டா சந்தோசம் உங்கப்பா சாகும்போது உனக்கு வயசு எட்டு உன்ன வளர்க்க நான் பட்ட கஷ்டம் சொல்லி புரியாது எல்லா கஷ்டமும் தீர்ந்து, இப்போதான் நான் பேரக்குழந்தைங்க கூட கொஞ்சம் சந்தோசமா இருக்கேன்டா. என் கடைசி காலத்தை இங்கேயே கழிச்சிட்டு போயிடுறேன்டா உன்னை இப்போ விளக்கம்லாம் கேக்கல நான் உயிரை வாங்காமல் கிளம்பு. 'என்று கொஞ்சம் அதட்டல் தோனியில் மகேஷ் சொல்ல, கலங்கி போய் நின்றாள் மரகதம் இரண்டு மாதங்கள் உருண்டோடின

மகேசும் லதாவும் கடைத்தெருவுக்கு சென்று திரும்பும் வேளையில் எதிரே வந்த லாரி மோதியதில், இருவரும் தூக்கி வீசப்பட மகேஷ் சிறு காயத்துடன் தப்பியிருந்தான்! லதாவிற்கு பலத்த அடிபட்டு 'கிருஷ்ணா மருத்துவமனையில்', அனுமதிக்கப்பட்டாள். டாக்டர் என் மனைவி எப்படியிருக்காங்க டாக்டர்... 'Icu வில் இருந்து வெளியேறிய டாக்டரிடம் அழுகுரலில் கேட்டான் மகேஷ்.....! உயிருக்கு எந்த ஆபத்தும் இல்ல...!! ஆக்ஸிடன்ட்ல சிதறின சில கண்ணாடி துண்டுகள், அவங்க விழித்திரைய பலமா கிழிச்சிருக்கு.....!! அவங்களுக்கு பார்வை வர வாய்ப்பில்லை.....!! அய்யோ....!! டாக்டர் லதாவுக்கு, கண் பார்வை கிடைக்க ஒண்ணுமே பண்ண முடியாதா....?

'ஒரு வழியிருக்கு.....!! இறந்தவங்க யாரோட கண்ணையாவது, அவங்களுக்கு உடனே பொருத்தினா பார்வை கிடைக்க வாய்ப்பிருக்கு.....!! நாங்க ஐ பேங்க்ல சொல்லியிருக்கோம்....!! நீங்களும் உங்க சைடுல ட்ரை பண்ணுங்க.....!! என்று சொல்லி நடந்த டாக்டரை , கலங்கும் கண்களோடு பார்த்து கொண்டிருந்த மகேசின் செல்போன் சிணுங்கியது.....! தாய் மரகதம் இருக்கும் ஹோம் நம்பர் திரையில் வர... 'நானே கடுப்புல இருக்கேன் இந்த கிழவி வேற , பேரனை பார்க்கணும், பேசனும்னு , உயிர வாங்குது...!! சே....!!சனியன்....!!
கை கழுவி விட்டாலும், நம்மள விடாது போல'... என்று முணு முணுத்துக் கொண்டே , மொபைலை சுவிட்ச் ஆஃப் செய்தான் மகேஷ்.....!

ஒரு மணிநேரம் கழித்து டாக்டர் வேகமாய் மகேஷிடம் வந்து.....!! மகேஷ் யூ ஆர் சோ லக்கி...!! உங்க மனைவிக்கு கண் கிடைச்சிடுச்சி...!! இப்போவே ஆபரேஷன் செஞ்சிடலாம்.....! நீங்க நர்ஸ் கிட்ட கேட்டு பார்மாலிட்டிஸ்லாம் முடிச்சிடுங்க....!! ரொம்ப நன்றி டாக்டர்.....!! ரொம்ப நன்றி '

டாக்டரின் கைகளை பிடித்து கண்ணீர் விட்டான் மகேஷ்....! மூன்று மணிநேரம் கழித்து, ஆபரேஷன் தியேட்டரிலிருந்து வெளியே வந்தார் டாக்டர்....!! ' டாக்டர் என் மனைவி எப்படியிருக்காங்க '....!! ஆபரேஷன் நல்லபடியா முடிந்தது மகேஷ்.....!! இன்னும் ஏழுநாள் கழித்து கட்டு பிரிச்சிடலாம்......!! அவங்க மயக்கம் தெளிய ரெண்டு மணி நேரமாகும்...!! அதுக்கப்புறம் நீங்க போய் அவங்களை பாருங்க.....!! லதா மயக்கம் தெளிந்து கட்டிலில் படுத்திருந்தாள்.....!! 'லதா உனக்கு ஒண்ணுமில்ல..!! நிச்சயம் பார்வை திரும்பிடும்னு டாக்டர் சொல்லிருக்காங்க....!! ம்ம்ம்....!! நாம அத்தையை தனியா தவிக்க விட்ட பாவமோ என்னவோ, இப்படி நடந்துடுச்சி.....!! திரும்ப அவங்கள கூப்பிட்டு வந்துடுங்க....!! நம்ம கூடவே வச்சுக்கலாம்....!! நான் கட்டு பிரிச்சி முதல்ல பார்க்கறது , அவங்க முகமாத்தான் இருக்கணும்...! சரி லதா...! காலையிலே அம்மா போன் பண்ணங்க.....!!

சன்டே நான் அவங்களை பார்க்க போகும் போதே, பேரக்குழந்தையை பார்க்கணும் போல இருக்குனு கேட்டாங்க....!! அதுக்குதான் போன் பண்ணி தொல்லை கொடுக்கறாங்கனு, நான் சுவிட்ச் ஆஃப் பண்ணிட்டேன்....!! இதோ இப்பவே



அம்மாவுக்கு போன் பண்ணி, கிளம்பி ரெடியா இருக்க சொல்லிடுறேன் லதா....!! மகேஷ் ஹோம்க்கு போன் பண்ணி, ' ஹலோ மேடம் நான் மரகதம் அம்மாவோட மகன் பேசறேன்....!! அவங்ககிட்ட கொஞ்சம் பேசணும்......!!! என்ன சார் இப்பஐ பண்ணிட்டிங்களே.....!! படிச்சவங்க தானே நீங்க...! காலையில அவங்களுக்கு ஹார்ட் அட்டாக் வந்துடுச்சி.....!! கடைசியா மகனையும் பேரனையும் பார்க்கணும்னு சொன்னாங்க.....!! உங்களுக்கு போன் பண்ணா கட் பண்ணிட்டு,

சுவிட்ச் ஆஃப் பண்ணிட்டிங்க.....!! அவங்க மரணத்தோட போராடி உயிரை விட்டாங்க.....!! அவங்க கடைசி ஆசையை கூட நிறைவேற்றாத நீங்கலாம் என்ன மனுசங்களோ......!! அப்புறம் ஒரு விசயம், எங்க ஹோம்ல யாராச்சும் இறந்துட்டா , அவங்க கண்களை தானமா கொடுக்கறது பழக்கம்.....!! உங்களுக்கு போன் பண்ணினோம் நீங்க எடுக்கலை....!! அதனால நாங்களா முடிவு பண்ணி, 'கண்ணை தானமா' கொடுத்துட்டோம்.....!!! உங்க அம்மா உயிரோட இருக்கும் போது, உங்களை பார்க்க ஆசைப்பட்டாங்க.....!! அவங்க கண் 'கிருஷ்ணா ஆஸ்பிட்டல்ல'...., ஒரு லேடிக்கு வச்சிருக்காங்க....!! ஒரு வாரம் கழிச்சி , 'அவங்க கண்ணையாவது ' போய் பாருங்க......!!

அவங்க , 'ஆத்மா நிம்மதியாகும்' ......!! போனை காதிலிருந்து தரையில் தவறவிட்டு, அம்மாஆ.......என்று அழுதபடியே ஓடி, மருத்துவமனையின் அறிக்கையை தேடி பிடித்து பார்த்தவன். அதிர்ந்தான்.....!! அவள் மனைவி லதாவிற்கு கண்தானம் கொடுத்தவர் என்னும் அறிக்கையில்,, 'மரகதம் என்றிருந்தது' ....!!! உயிர் போவதற்கு முன் தன் மகனையும், பாசமான பேரனையும் பார்க்க துடித்த, அந்த தாயின் ஆசை, உள்ளார்ந்த பாசம், இறைவனின் இதயத்தையும் இளகச் செய்ததோ....??

இறந்து போன அந்த பாசத் தாய் மரகதம், இனி தன் ஆசை தீர மகிழ்வோடு தன் பேரனையும், மகனையும் பார்ப்பாள்....!! 'லதாவின் கண்கள் மூலம் இறந்த பின்பும் நம்மை வாழ வைப்பது , நம் அன்னை மட்டுமே.... !உதிரத்தை பாலாக கொடுத்தவள் தாய்...!! நாம் நலமாக வாழ, நமக்காக வாழ்நாள் முழுவதும் தவிக்கும் , ஒரே தெய்வம்....'..தாய்' அவளை ஒருபோதும் கண்ணீர் சிந்தவிடாதீர்கள்...!!
'இரும்பு இதயங்கள் இளகட்டும்' ,.....!!

# இன்னிசை அரங்கேற்ற விழா





சென்னை இராயப் பேட்டையில் உட்லன்ஸ் திரையரங்கில் மார்ச் 25-ம் தேதி மகாகவி பாரதியார் மக்கள் கழகத்தின் நிறுவனத் தலைவர் மயிலை எஸ்.சத்யா அவர்களின் மகள் எஸ்.என்.ஷட்ஜாவின் இன்னிசை அரங்கேற்ற விழா சிறப்பாக நடைபெற்றது. கர்நாடக இசைப்பாடகி நித்யஸ்ரீ மகாதேவன் அவர்கள் குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். மேலும் தமிழக காங்கிரஸ் தலைவர் திருநாவுக்கரசு, திரைப்பட இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமார், எஸ்.வி.சேகர், நடிகர் ராஜன், இந்திய மக்கள் கல்வி கழக தலைவர் தேவநாதன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு விழாவிற்கு மெருகேற்றி வாழ்த்துக்களையும் தெரிவித்தனர்.






ஸ்ரீராமநவமியை முன்னிட்டு ஷீரடி சாய்பாபா பிறந்தநாள் விழாவும் மயிலை சாய்பாபா கோயிலில் காலையில் பால், தயிர், தேன் அபிஷேகமும் இரவில் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட பாபாவின் திருவுருவமும் வீதி உலா வந்தது.



ஸ்ரீராமநவமி அன்று மயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்தில் ஸ்ரீராமருக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு வீதி உலா வந்தது.

Owned and Published by K. Ganesh, No.37/17, 14th trust cross street, Mandavelipakkam, Chennai - 600028 and Printed by M.V.Murugeshan at Sree K.R.R. Press, New No.19, Old No.7, Aziz Mulk 2nd Street, Thousandlight, Chennai - 600 006. Editor: K.Ganesh